ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2465/14 - 2025 දෙසැම්බර් මස 03 වැනි බදාදා - 2025.12.03

2465/14 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: WGSWD&EIP/ACQ/KB/50.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் இல.: 4-3/10/2020/LRB/ 195.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப் பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

(பொதுத் தேவையின் விபரம்: வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், 120 பஸ் பயண வழி தொடக்கம் பெப்பிலியான, கொழும்பு வீதி, இல. 394/4 எனும் முகவரியில் அமைந்துள்ள வ/ப யூ. எஸ். எஸ். சர்விஸ் (தனியார்) கம்பனி அமைந்துள்ள காணி வரையுள்ள கால்வாயை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான காணித்துண்டுகளை அரசுக்கு எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 535C - பெப்பிலியான கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் பெப்பிலியான (பொரலஸ்கமுவை நகர சபை எல்லைக்குட்பட்ட) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத் தினால் தயாரிக்கப்பட்ட 2025.11.21 ஆந் திகதிய கடத்திரல் வரைபட இல. 521212 (தொகுதி இல. 2, தாள் இல. 05) இல் துண்டு இல. 2, 3, 5, 6, 8, 10, 12 எனக் காட்டப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட ஏழு (07) காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 2**

காணியின் பெயர்: மீகஹவத்த, மிதெல்லகஹ கும்புர, ஹிக்கஹ கும்புர அல்லது புலுகஹ கும்புர, மிதெல்லகஹ கும்புர, அல்லது திவிகஹமுல்ல கும்புர, கதுறுகஹ கும்புர, வெடவசம் மாதங்கஹ கும்புர அல்லது பேதுருவ கும்புர, கொழும்பு வீதியில் வரி மதிப்பீட்டு இல. 408, 410, 412 ஐ உடைய காணிகள்; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: வ/ப யூரோ ஸ்கேன் எக்ஸ்போர்ட் (தனியார்) கம்பனி; விஸ்தீரணம்: 0.0171 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 3**

காணியின் பெயர்: - ; விபரம்: வீட்டுத் தோட்டம், பழைய கால்வாயின் ஒரு பகுதி; உரிமை கோருபவர்: தெரியாது; ஆரம்ப உரிமை கோருபவர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0025 ஹெக்டயார்.

03. **துண்டு இல. 5**

காணியின் பெயர்: - ; விபரம்: வீட்டுத் தோட்டம், பழைய கால்வாயின் ஒரு பகுதி; உரிமை கோருபவர்: தெரியாது; ஆரம்ப உரிமை கோருபவர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0010 ஹெக்டயார்.

04. **துண்டு இல. 6**

காணியின் பெயர்: மீகஹவத்த, கொழும்பு வீதியில் வரி மதிப்பீட்டு இல. 408/A ஐ உடைய காணி; விபரம்: வீட்டுத் தோட்டம், நிலையான கட்டிடமொன்றின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: சுஜாதா ஸ்ரீயாணி குணரத்ன, அநுரங்க சஜித் குணரத்ன, நிலூப ரவீன் குணரத்ன, ஹேவாதேவகே நிமல் ஜயசிறி குணரத்ன, ஹேவா தேவகே சுனில் குணரத்ன; விஸ்தீரணம்: 0.0069 ஹெக்டயார்.

05. **துண்டு இல. 8**

காணியின் பெயர்: தெரியாது; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: - ; விஸ்தீரணம்: 0.0011 ஹெக்டயார்.

06. **துண்டு இல. 10**

காணியின் பெயர்: கஹட்டகஹ ஓவிட்ட அல்லது ஹிக்கஹ ஓவிட்ட; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: - ; விஸ்தீரணம்: 0.0010 ஹெக்டயார்.

07. **துண்டு இல. 12**

காணியின் பெயர்: ஹிக்கஹ ஓவிட்ட, சுனேத்திரா தேவி வீதியில் வரி மதிப்பீட்டு இல. 406/C ஐ உடைய காணி; விபரம்: வீட்டுத் தோட்டம், நிலையான கட்டிடமொன்றின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: திரு. முகந் திரம்லா கெதர சாகுல் ஹமீட் முகமட் நசார்; விஸ்தீரணம்: 0.0068 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள இலங்கை காணி அபிவிருத் திக் கூட்டுத்தாபனத்தின் வேரஸ்கங்க மழைநீர் வடிகால மைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன் வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,<br>
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,<br>
வேரஸ்கங்க மழைநீர்<br>
வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல்<br>
மேம்படுத்தல் கருத்திட்டம்.<br>
கெஸ்பேவை பிரதேச செயலாளர்<br>
பிரிவு.

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல்<br>
மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி<br>
எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,<br>
இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்,<br>
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,<br>
வெலிக்கடை, இராஜகிரிய,<br>
2025, திசெம்பர் 02.

EOG 12 - 0014